Registered No. M. 4018.

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 7 | May 1945 | No. 5

விஷய சூசிகை. பக்கம்

| | |
|---|---|
| M. K. முக்கர்ஜி அவர்களின் தென் இந்தியா யாத்திரை | 1 |
| யோகரத்நாகரம் | 15 - 20 |

**சந்தா விகிதம்.**

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

**விளம்பர விகிதம்.**

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

**Pandit, S. NARAYANA IYENGAR.**

Editor and Publisher.

No 2, Police Station West Lane, Madura.

[illegible]] [விலை 0—3—0

[illegible]டேஸ்வர் பிரஸ், மதுரை—45.

3L
L:5ணா211,1125vL
N45·7·5;1
210242

## அகில பாரத ஆயுர்வேத சம்மேளனத்தலைவர் M. K. முக்கர்ஜி அவர்களின் தக்ஷிணதேச யாத்திரை.

ஷிரூர் மடத்தலைவர் அவர்கள் தங்கள் மடம் பொதுஜன சேவைக்காக ஏற்பட்டதென கூறியதற்கேற்ப தலைவர் அவர்களுக்கும் அவரது கோஷ்டியினருக்கும் அதிகாலையிலேயே உடிப்பியிலிருந்து ஷிமோகாவுக்கு (நிகில கர்நாடக ஆயுர்வேத மண்டல தலைவர் இருக்கும் இடம்) புறப்படவேண்டியவைகளை தயார்செய்து கொடுத்தார்கள். 120 மைல் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. அனைவரும் பஸ்ஸில் பிரயாணம் செய்தார்கள். மத்தியானத்தில், அகும்பியில் ஒரு தனவானால் உபசரிக்கப்பட்டனர். இருட்டும் வேளைக்கு ஷிமோகாபோய் சேர்ந்தனர். கர்நாடக மண்டலத்தலைவர் தம் வீட்டில் எல்லோரையும் உபசரித்தார் மறுநாள் தலைவர் அவர்கள் ஒரு அழகிய சிறு பிரசங்கத்தில் ஆயுர்வேத காங்கிரஸின் செய்திகளை விளக்கினார் மறுநாள் அங்கு இண்டர்மீடியேட் காலேஜ் அஸோஸியேஷனிலிருந்து வந்த வரவேற்பை ஒப்புக்கொண்டு இந்திய ஆயுர்வேதத்தின் பெருமையை அறிந்துகொள்ளும்படி பிரசங்கித்தார். பிறகு முக்கர்ஜீ அவர்கள் பெங்களூருக்கு புறப்பட்டனர். மைசூர் சமஸ்தான ஆயுர்வேத காங்கிரஸார் தயாராக காத்திருந்து வரவேற்றனர். ஜனவரி 14ம் முழுவதும் உள்ளூர் வைத்தியர்களை பேட்டி காண்பதிலேயே தலைவர் அவர்களுக்கு பொழுது கழிந்தது. மறுநாள் வைத்ய சங்கத்தில் ஆயுர்வேத வைத்யர்களின் கடமைகளைப்பற்றி விரிவாகப் பேசினார். தனிப்பட்ட முறையில் அழைத்த உள்ளூர் கனவான்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்டு அவர்கள் வீட்டிற்குச் செல்லும்படியும் ஏற்பட்டது. சமஸ்தான அரசாங்கத்தாரின் சட்ட இலாகா காரியதரிசியை அவர் சுதேச வைத்ய சபையின் தலைவராக இருந்தபடியால் பேட்டிகண்டு பேசினார். ஆயுர்வேதத்தின் பெருமையையும் அதற்கு கொடுக்கவேண்டிய மதிப்பையும் பற்றி விளக்கினார் மறுநாள் சமஸ்தானத்தின் முதல் கவுன்சிலர் புல்லாரெட்டி அவர்களையும் கண்டுபேசினார். ஸ்ரீ புல்லாரெட்டி அவர்களின் யோசனைப்படி சமஸ்தான மந்திரியையும் திவானையும் கண்டுபேச விரும்பியும் கொச்சி யாத்திரை காத்திருந்தபடியால் திவானை மட்டும் தான் கண்டுபேசமுடிந்தது. திவான் விருப்பத்தின்படி ஒரு யாதாஸ்து தயார்செய்ய ஒப்புக்கொண்டார். 17ம் தேதி சமஸ்தானத்தாரின் ஆயுர்வேத புனருத்தாரண வேலைகளைப் பார்வையிட்டார். அன்றே சத்யநாராயண சகோதரர்களையும் மற்றும் பல பத்திரிகையாளர்களையும் பார்த்துப்பேசினார். சாயங்காலம் சமஸ்தான சம்ஸ்கிருத கல்லூரியில் ஒரு அழகிய பிரசங்கம் செய்து ஆயுர்வேதத்தின் பெருமையை விளக்கினார். காசி பண்டித வைத்ய லக்ஷ்மிநாராயண அவர்களுடன் வெகுநேரம் சம்பாஷித்தார். பிறகு பெங்களூரிலிருந்து முக்கர்ஜி புறப்பட்டார். அவர்கள் தயாரித்த விரிவான யாதாஸ்தும் திவானிடமும் முதல் மந்திரியிடமும் சுதேச வைத்யசபைத் தலைவரிடமும் சமர்ப்பிக்கப்பட்டது.

210242



நான்குதோலா யெடை மருந்தும், நடுத்தரமான நோயாளிக்கு மூன்றுதோலா யெடையுள்ள மருந்தும், துர்பலமான நோயாளிக்கு இரண்டு தோலா யெடையுள்ள மருந்தும் கொடுக்கவேண்டும். இந்த அளவு கிருதங்களுக்கும் கஷாயத்திற்குமெனக் கொள்ள வேண்டும். அதாவது நல்ல திருடசரீரமுள்ள வாலிபனுக்கு நான்கு தோலா யெடையுள்ள கிருதங்கள், தைலங்கள் இவைகளை ஒரு வேளைக்கு உள்ளுக்குக்கொடுக்கலாம். அதே நோயாளிக்கு கஷாயம்செய்துகொடுப்பதானால் அப்பொழுது நான்குதோலா யெடையுள்ள திரவியத்தைக் கணக்குப்படி ஜலம்விட்டு வற்றவைத்து ஒரு வேளைக்கு உள்ளுக்கு கொடுக்கலாம். இவ்விதம் நூலில் காணப்பட்டபோதிலும் கிருதம் அல்லது தைலத்தின் அளவு அரை அவுன்சுமுதல் ஒரு அவுன்சுவரைக்கும் ஒருவேளைக்கு உபயோகிக்கலாம்; கஷாயதிரவியங்களை மொத்தம் ஒருதோலா எடுத்து கணக்குப்படி ஜலம்விட்டுக் காய்ச்சி வடிகட்டி ஒருவேளைக்கு உபயோகிக்கலாம், கிருதம் தைலங்கள் தினம் ஒருவேளைதான் உபயோகிக்க வேண்டும். இது பொது விதி. வியாதிகளை அநுசரித்து தினம் இருவேளையும் சாப்பிடலாம். கஷாயத்தை தினம் இருவேளை சாப்பிடுவது பொதுவிதி. விசேஷ சந்தர்ப்பங்களில் தினம் மூன்று வேளை சாப்பிடலாம்; இனி மற்ற மருந்துகளின் அளவு சொல்லப்படுகிறது. சூர்ணங்களின் அளவு ஒருதோலா யெடையாகும். இவ்விதமே கல்கம், வடகம், இவைகளையும் உபயோகிக்க வேண்டும் சூர்ணங்களை இருமடங்கு திரவம்விட்டு குழைத்து நக்கிச்சாப்பிட வேண்டும். சூர்ணங்களைக் குடிப்பதானால் அப்பொழுது நான்கு மடங்கு திரவத்தில் கலக்கிக்குடிக்கவேண்டும். கஷாயம் அல்லது கிருதம் முதலியவைகளில் தேன் நெய் இவைகளை மேல்பொடியாக உபயோகிக்கச் சொல்லுமிடங்களில் சூர்ணத்திற்குச் சொன்ன அளவு அதாவது ஒருதோலாயெடை எடுத்துக்கொள்ளவேண்டும். இனி கஷாயம் செய்யும் முறை சொல்லப்படுகிறது. நான்குதோலா திரவியத்திற்கு 64 தோலாயெடை அதாவது தத்காலம் வழக்கத்திலுள்ள சின்னப்படியில் ஒருபடி ஜலம்விட்டு நான்கில் ஒன்றாக அதாவது சின்னப்படி கால்படியாக வற்றவைத்து வடிகட்டிக்கொடுக்க வேண்டும். மிகுந்த அக்னிபலம் சரீரபலம் உள்ளவர்களுக்கு இல்

விதம் கால்படி கஷாயம் கொடுக்கவேண்டும். சிலர் வேறு விதமாக அபிப்பிராயப்படுகின்றனர். இவ்விதம் தயார்செய்த கஷாயத்தில அரைக்கால்படி கஷாயத்தை உபயோகப்படுத்திவிட்டு மீதியைத் தள்ளிவிடவேண்டுமென்று சொல்லுகின்றனர். ஏனெனில் கஷாயத்தை ஒவ்வொரு வேளையும் புதிதாகத் தயாரித்து உபயோகப் படுத்தவேண்டுமென்பது அவர்கள் அபிப்பிராயம். இன்னும் சிலர் வேறுவிதமாக அபிப்பிராயப்படுகின்றனர். முன் சொன்னபடி பாதியைத்தள்ளிவிடுவது உசிதமல்லவென்று நினைத்து எட்டில் ஒன்ருக வற்றவைத்து முழுவதையும் உபயோகிக்க வேண்டுமென் கின்றனர். இவ்விதம் பலமதங்கள் இருந்தாலும் அரைக்கால்படி கஷாயம்தான் பெரியோர்கள் பரம்பரையாக உபயோகித்து வருகின் றனர். காய்ச்சல் ஆரம்பித்து ஏழாவது நாளிலும் ஆம லக்ஷணம் இருக்குமாகில் ஏழாவது நாள்முதல் பாசன மருந்துகளைக் கொடுக்க வேண்டும். மருந்து உட்கொள்ளும் காலம்—வெறும் வயிற்றில் மருந்து உட்கொண்டால் மருந்தின் வீர்யம் மிகுந்திருக்கும். நிச் சயமாகவும் சீக்கிரமாகவும் வியாதிகளைப் போக்கும். குழந்தைகள், வயதானவர்கள், ஸ்திரீகள், மருந்துவேகம் தாங்காதவர்கள், ஆகிய இவர்கள் இவ்விதம் மருந்து உட்கொள்ளுவதால் ஆயாசத்தையடை வார்கள், பலக்குறைவும் உண்டாகும். மருந்து ஜீர்ணமானதற்கு அடையாளம்—வாயு அனுலோமமாகி தென்பு, பசி, தாகம், தெளிவு, சரீரம் இலகுவாதல், சுத்த ஏப்பம், ஆகிய இவையாகும். மருந்து ஜீர்ணமாகாத நிலைமைக்கு அடையாளம்—சிரமம், எரிச்சல், சரீரம் துவண்டுபோதல், கிறுகிறுப்பு, மூர்ச்சை, தலைவலி, சந்தோஷமின்மை, வாந்தி மயக்கம், ஆகிய இவையாகும். உட்கொண்ட மருந்து ஜீர்ண மாகாமலிருக்கும்பொழுது ஆகாரம் சாப்பிட்டாலும் அல்லது சாப் பிட்ட ஆகாரம் ஜீர்ணமாகாமலிருக்கும்பொழுது மருந்து சாப்பிட்டா லும் அது ரோகத்தை விலக்காது. வேறு ரோகங்களையும் உண்டுபண் ணும். ஆகாரத்திற்கு முதலில் மருந்தை உட்கொண்டால் அது சீக் கிரமாக ஜீர்ணமாகும், பலத்தைக் குறைக்காது, அன்னத்துடன்கலந் துவிடுவதால் மேல்நோக்கி வராது, இம்முறை பயந்தவர்கள், பாலர் கள், கிழவர்கள், ஸ்திரீகள், ஆகிய இவர்களுக்கு ஏற்றது. இனி ஜ்வரங் களில் பத்யவகை சொல்லப்படுகிறது. சிறு கீரை, சக்ரவர்த்திக் கீரை, இளம் முள்ளங்கி, பர்பாடகம், பேய்ப்புடல், கருவேப்பிலை,

210242



சீந்தில் துளிர், வேப்பம்பூ, மிளகு, மஞ்சணத் துளிர், அடபொதியன், புளியாரை, ஆரை, ஆகிய இவைகளை கீரையில் பிரியமுள்ளவர்களுக்கு உபயோகிக்கலாம். பாசிப்பயறு, தட்டைப்பயறு, கொத்துக்கடலை, கொள்ளு, வயல்பயறு, ஆகிய இவைகளைக் கஞ்சிகளில் உபயோகிக்கலாம். லாவம், கபிஞ்ஜலம், மான், பிருஷதம் என்ற மான், சரபம், முயல், காலபுச்சம், குரங்கம் என்ற மான், மற்ற மான் வகைகள், ஆகிய இவைகளை மாமிசம் தேவையுள்ளவர்களுக்கு உபயோகிக்கலாம். ஸாரஸம் என்ற நீர்பறவை, க்ரௌஞ்சம், மயில், தித்திரிபக்ஷி, கோழி, ஆகிய இவை காய்ச்சல்களில் விலக்கவேண்டுமென்பது சிலா மதம். கத்தரிக்காய், பீலு, புடல், கக்கரி கடில்லம் ஆகிய காய்களை உபயோகிக்கலாம். இவ்வகைகளில் நெய் எண்ணெ இவைகள் சேரக்கூடாது. ஒரு வருஷம் பழகிய அரிசியைக்கொண்டு தயாரித்த அன்னம் நல்லது, இரண்டு வருஷம் பழகிய கோதுமை முதலியவைகளால் ரொட்டி தயாரித்துக்கொடுப்பது நல்லது. சரீரத்திற்கேற்றபடி இவைகளைக் கொஞ்சமாகக் கொடுக்கவேண்டும். மருந்து உட்கொள்ளும் விதம்—உட்கார்ந்து ஆயாசம் நீங்கின பிறகு தூய்மையான மனதுடன் தங்கம், வெள்ளி, மண், இவைகளால் செய்யப்பட்ட பாத்திரத்தில் மருந்தைச்சேர்த்து அதைச்சாப்பிட்டு பாத்திரத்தை தலைகிழாக கவிழ்த்து மற்றொரு பாத்திரத்தில் வைத்து விட்டு தாம்பூலம் முதலியவைகளை உபயோகிக்கவும். மருந்து சாப்பிட்டவுடன் வாயைத் தண்ணீர்விட்டு துப்பக்கூடாது. கஷாயம் கல்கம், ஸ்வரஸம் இவைகளைத் தயாரித்து மூன்று மணிக்குள் உபயோகித்துவிட வேண்டும். மூன்றுமணிக்கு மேல் வைத்தால் இவற்றின் குணம் கெட்டுப்போகும். கண்களுக்குப்போடும் அஞ்சனங்கள், சூர்ணங்கள், ஆகிய இவைகள் மூன்று மாதங்களுக்குமேல் குணத்தை இழந்துவிடும். வடகம், லேகியம், இவைகள் ஆறுமாதங்களுக்குமேல் குணத்தை யிழந்துவிடும். தைலம், கிருதம், ஆகிய இவை ஒரு வருஷத்திற்குமேல் குணத்தை யிழக்கும். பாசன மருந்துகளின் லக்ஷணம்—அபக்வமான ஆகாரத்தையும், அபக்வமான ஆகார ரஸத்தையும், அபக்வமான திரிதோஷங்களையும், பக்வப்படுத்தும் மருந்து பாசனமெனப்படும். பிரகோபத்தை யடைந்த திரிதோஷங்களை வெளியேற்றாமலும், சம

நிலைமையிலுள்ள திரிதோஷங்களை கிளப்பாமலும், பிரகோபத்தை யடைந்த திரிதோஷங்களை சம நிலைமையில் வைப்பதுமான மருந்துக்கு "சமனம்" எனப்பெயர். பாசனம், சமனம், இவைகளை உபயோகிக்கும் காலம் சொல்லப்படுகிறது—ஆமஜ்வரத்தில் ஏழாவது நாள் பாசனம் கொடுக்கவேண்டும். ஆமமின்றி யிருந்தால் ஏழாவது நாள் பாசனமருந்துகளைக்கொடுக்கவேண்டும். வாதஜ்வரத்தில் மருந்துகள்—பூர்ண லக்ஷணத்துடன் கூடிய வாதஜ்வரங்களில் ஏழாவதுநாள் சீந்தில், தேசாவரம், சுக்கு, இவைகளால் தயாரிக்கப்பட்ட கஷாயத்தைக் கொடுக்கவேண்டும். இது வாதஜ்வரங்களில் பாசனமாகும். இனி வாதஜ்வரங்களில் சமன கஷாயங்கள் சொல்லப்படுகின்றன. கிராதாதி கஷாயம்—நிலவேம்பு, கோரைக்கிழங்கு, சீந்தில், விலாமிச்சவேர், கண்டங்கத்திரி, முள்ளிவேர், சிறுநெரிஞ்சில்வேர், ஓரிலை, மூவிலை, சுக்கு, இவைகளைச் சமஎடையாக எடுத்து இடித்து கஷாயம்செய்து கொடுக்கவும். குறிப்பு—கஷாய முறை ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மொத்தச்சரக்குகளை ஒரு தோலாஎடை எடுத்து இடித்து அதை ஓர் சட்டியிலிட்டு எட்டுபங்கு தண்ணீர்விட்டு நான்கில் ஒன்றாக வற்றவைத்துவடிகட்டி ஒருவேளைக்குச் சாப்பிடவும். இதுதான் சாஸ்திரவிதி. வழக்கமும் இதுவே உதாஹரணமாக இந்த கிராதாதி கஷாயத்தில் மொத்தச்சரக்குகள் பத்து. இந்த பத்து சரக்குகளும் சேர்ந்து மொத்தம் ஒருதோலா எடை இருக்கவேண்டும். அதாவது வகைக்கு அரைக்கால் ரூபாஎடைக்கும் குறைவாக அதாவது $1\frac{1}{2}$ அணா எடை எடுத்து இடித்து எட்டுதோலா ஜலம் அதாவது சின்னப்படிக்கு அரைக்கால்படி ஜலம்விட்டு அதை நான்கில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டிச் சாப்பிடவேண்டும். சமயத்திற்குத் தக்கபடி ஒரு தோலாஎடையை இரண்டு தோலாவாகவும் எடுத்துக்கொள்ளலாம். அப்பொழுது சின்னப்படியில் கால்படி ஜலம்விட்டு நான்கில் ஒன்றாக வற்றவைத்துக்கொள்ள வேண்டும். சாலிபர்ணியாதி—ஓரிலை, குருந்தொட்டி, அரத்தை, சீந்தில், நன்னாரி, இவைகளின் கஷாயத்தைக் கொடுக்கவும். காச்மர்யாதி—நிலக்குமிழம் வேர், நன்னாரி, திராக்ஷை, திராயமாணை, சீந்தில், இந்த கஷாயத்தில் வெல்லம் சேர்த்துக் கொடுக்கவும். மரிசாதி சூர்ணம்—மிளகு, ருசகம்

என்ற உப்பு, சுக்கு, நிலவேம்பு, கடுக்காய், திப்பிலி, கடுகுரோகிணி, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து ஒரு தோலாவெடை சூர்ணத்தை வெந்நீர் முதலிய அனுபானங்களில் கொடுக்கவும். திரிபலா மோதகம்—திரிபலை, திரிகடு, வெல்லம், சர்க்கரை, இவைகள் சமவெடை, இவைகள் மொத்த வெடையில் பாதி சிவதை, அதாவது முதல்சொன்ன எட்டு சரக்குகளும் வகைக்குத் தோலா ஒன்று எடுத்து வெல்லம் சர்க்கரை நீங்கலாக மற்றவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து அதோடு சிவதைவேர் பொடி தோலா நான்கு சேர்த்து வெல்லம் சர்க்கரைகளைச் சேர்த்துத் தேன்விட்டு பிசைந்து வைத்துக்கொள்ளவும். அரைத்தோலா முதல் ஒரு தோலா வரையில் கொடுக்கவும். ஒன்று அல்லது இரண்டு தடவை மலம் போகும். இனி பித்தஜ்வர கஷாயங்கள் சொல்லப்படுகின்றன. கட்பலாதி—கட்பலம், வெப்பாலையரிசி, பாடா, (இங்கு மலைதாங்கிவேர்) கடுகுரோகிணி, கோரைக்கிழங்கு, இவைகளைக் கஷாயமிட்டு பத்தாவது நாள் கொடுக்கவும். இது பாசன கஷாயம். துராலபாதி சமன கஷாயம்—சிறுகாஞ்சொறிவேர், பர்பாடகம், ஞாழல், நிலவேம்பு, ஆடாதோடை, கடுகுரோகிணி, இவைகளைக் கஷாயமிட்டு அதில் சர்க்கரை ஒரு தோலா சேர்த்துச்சாப்பிடவும், தாகம், ரக்தபித்தம், ஜ்வரஎரிச்சல், ஆகிய இவை நீங்கும். திராக்ஷாதி—திராக்ஷை, கடுக்காய், பர்பாடகம், கோரைக்கிழங்கு, சரக்கொன்றைப்புளி, கடுகுரோகிணி, இவைகளைக் கஷாயம் செய்துகொடுக்கவும். புலப்பம், மூர்ச்சை, கிறுகிறுப்பு, எரிச்சல், இளைப்பு, தாகம், இவைகள் நீங்கும். பர்பாடக கஷாயம்—பர்பாடகம் மாத்திரம், கஷாயம் செய்து கொ[illegible] பித்தக்காய்ச்சல் விலகும். சிகப்பு சந்தனம், விலாமிச்ச வேர் கொத்தமல்லி விதை, பர்பாடகம், இவைகளையும் சேர்த்து கஷாயம் செய்துகொடுத்தால் பித்தக்காய்ச்சல்விலகுமென்பதைச்சொல்லவும் வேண்டுமோ. அத்திப்பட்டையைக் கஷாயம் செய்து சர்க்கரை சேர்த்துக்கொடுக்க காய்ச்சலில் காணும் எரிச்சல் தணியும், சீந்தில் கஷாயத்தில் சர்க்கரை சேர்த்துக்கொடுக்க பித்தஜ்வரம் விலகும். திராக்ஷாதி—திராக்ஷை, சீந்தில், கோரைக்கிழங்கு, பர்பாடகம், கடுகுரோகிணி, இவைகளின் கஷாயம் பித்த ஜ்வரத்தைக் கண்டிக்கும். சந்தனாதி—சிகப்பு சந்தனம், வெள்ளைச்சந்தனம், வெட்டி

210242



வேர், விலாமிச்சவேர், பர்பாடகம், கோரைக்கிழங்கு, சுக்கு, இவைகளின் கஷாயம் பித்தஜ்வரத்தைப் போக்கும். குடூச்யாதி—காய்ச்சல்களில் பராசரர் முதலிய முனிவர்கள் பலவித கஷாயங்களை எதற்காகச் சொன்னார்கள்? சீந்தில், செவ்விவற்றல். பர்பாடகம், இவைகளின் கஷாயம் ஒன்றே பித்தஜ்வரங்களைப் போக்கப் போதுமானதல்லவா. ஜலாதி—வெட்டிவேர், தாமரைக்கிழங்கு, கோரைக்கிழங்கு அரேணுகம், சுக்கு, விலாமிச்சவேர், இவைகளின் கஷாயம் வாந்தி எரிச்சல், தாகத்துடன் கூடிய காய்ச்சலைப் போக்கும். கடுரோகிணியை வென்னீரில் அரைத்து சர்க்கரையுடன் சாப்பிட எரிச்சல், தாக திருகிறுப்புடன் கூடிய காய்ச்சல்கள் விலகும். வேப்பம் துளிரை இடித்துச்சார் எடுத்து அதில் மேலிருக்கும் நுரையை சரீரத்தி தடவ தாகம், எரிச்சல், மயக்கம் இவை போம். குறிப்பு—வெ ரஸத்தில் தனி நுரை கிடைப்பது கஷ்டம். ஆகவே ரஸத்தையே உபயோகிக்கவேண்டும். கொம்மட்டி மாதளையின் உள்ளிருக்கு சதை அல்லது சுளையுடன் தேன் இந்துப்பு இவைகளைச் சேர்த்து குழைத்து நாக்கு, தாலு, கழுத்து, மார்பு, தலை, இவைகளில் தட நாக்கு வரட்சி விலகும். இனி கபஜ்வரத்தில் கஷாயங்கள் சொல்லப்படுகின்றன. பீஜபூராதி பாசனம்—கொம்மட்டி மாதளை வேர் கடுக்காய், சுக்கு, தேசாவரம், இவைகளின் கஷாயத்தில் யவக்ஷாரம் சேர்த்து காய்ச்சல் ஆரம்பித்த 1?-வது நாள் கொடுக்கவும். இது பாசன கஷாயம். இனி சமன கஷாயங்கள் சொல்லப்படுகின்றன. பூநிம்பாதி—நிலவேம்பு, வேப்பம்பட்டை, திப்பிலி, பூலாங்கிழங்கு சுக்கு, தண்ணீர்விட்டான், சிந்தில், கண்டங்கத்திரி, இவைகளின் கஷாயத்தைக் கொடுக்கவும். படோலாதி—பேப்புடல், திரிபலை கடுகுரோகிணி, பூலாங்கிழங்கு, ஆடாதோடை, சிந்தல, இவைகளி கஷாயத்தில் தேன்சேர்த்துக் கொடுக்கவும். நிதிக்திகாதி—கண் டங்கத்திரி, சிந்தில், ஏலம், சுக்கு, இவைகளின் கஷாயம் சுவாஸ கபகாஸம், வலி, அக்னிமந்தம், இவைகளை விலக்கி வயிற்றில் வா சேஷ்டையையும் போக்கும். சிருங்கியாதி—கடுக்காய்த்து, திப்பிலி கட்பலம், சாதா கோஷ்டம், இவைகளை இடித்து வஸ்திரகாய செய்து ஒரு தோலா சூர்ணத்தைத தேனில் குழைத்துச் சாப்பிட சுவாஸம், காஸம் கபஜ்வரம், ஆகிய இவை போம். இதற்கு "சாதுர்பத்ராவலேஹம்" எனப்பெயர். பார்ங்கியாதி—சிறுதேக்கு சிந்தில், கோரைக்கிழங்கு, தேவதாரு, கண்டங்கத்திரி, சுக்கு, திப்பிலி, சாதாகோஷ்டம், இவைகளின் கஷாயம் சுவாஸத்தைப் போக்கு. பசியையும், ருசியையும், கொடுக்கும். இனி எல்லாககாய்ச்சல்களுக்கும் பொதுவான கஷாயங்கள் சொல்லப்படுகின்றன.